காலை முரசு
பக்கங்கள் 20

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

### கம்பளையில் சோகம்

மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பளை, 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 27 சனிக்கிழமை 10.02.2024 அதிர்வு 193





# நாட்டை மீளக் கட்டியெழுப்ப தோளோடு தோள் சேருங்கள்

## ஆஸ்திரேலியா வாழ் இலங்கையர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

**இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துடன் தொடர்ச்சியாக இணைந்து கொள்ளுமாறு ஆஸ்திரேலியா வாழ் இலங்கையர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.**

**ஆஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆஸ்திரேலிய பேர்த் நகரில் வசிக்கும் ஆஸ்திரேலியா வாழ் இலங்கையர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே மேற்படி அழைப்பை அவர் விடுத்தார்.**

இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது மற்றும் நவீனமயப்படுத்துவது குறித்து புலம்பெயர் இலங்கையர்களுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி, அவற்றுடன் தொடர்ச்சியாக இணைந்துகொள்ளுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கையைக் கட்டியெழுப்ப அரசு ஆரம்பித்திருக்கும் வேலைத்திட்டத்தைப் பாராட்டிய புலம்பெயர் இலங்கையர்கள், காலநிலை, சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் அபிவிருத்திக்காக அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது புலம்பெயர் இலங்கையர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, நாட்டின் முன்னேற்றத்துக்காக நீண்டகால கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுதல் உள்ளிட்ட புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டங்கள் தொடர்பிலும் 04

## இடதுசாரி ஆட்சி நடைபெறும் கேரளாவுக்கும் அநுர விஜயம்

### முடிவுக்கு வந்தது இந்தியப் பயணம்



இந்திய அரசின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் அந்நாட்டுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு கலந்துகொண்ட இந்திய விஜயத்தின் ஐந்தாவதும் இறுதியுமான 05




தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் சர்ச்சைகளில் சிக்கி, கைது செய்யப்பட்டு, விளக்க மறியலில் இருக்கின்றமையோடு அமைச்சர் பதவியையும் இழந்துள்ள கெஹலிய ரம்புக்வெல விவகாரம் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது.

ஏற்கனவே கடந்த ஆண்டு இறுதியில் அவர் சுகாதார அமைச்சராக 04




# உயர் நீதிமன்றைப் புறக்கணித்து சட்டத்தை நிறைவேற்ற முடியாது

## மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்குக் கடிதம்

இணையவழி (நிகழ்நிலை) காப்புச் சட்டத்தின் சில பிரிவுகள் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்துடன் இணங்கவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

இந்தக் குறைபாடுகள் தொடர்பில் தாம் மிகுந்த கவலையடைவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி. தெஹிதெனியவின் கையொப்பத்துடன் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் 30 இற்கும் மேற்பட்ட பிரிவுகள் அரசமைப்புடன் இணங்கவில்லையென உயர் நீதிமன்றம் அடையாளப்படுத்தியிருந்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

உரிய திருத்தங்களுக்கமைய, சட்டமூலத்தை நிறைவேற்ற நீதிமன்றம் அனுமதி வழங்கிய போதிலும், அந்த திருத்தங்கள் முழுமையாக அதில் உள்ளடக்கப்பட்டுள்ளமையைக் காண முடியவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் ஐந்து விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தங்கள் உள்ளடக்கப்படாமல் அரசமைப்பிற்கு முரணான வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளமையின் ஊடாக மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்குள்ள வாய்ப்புகள் தொடர்பில் கவலைக்குரிய நிலை தோன்றியுள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பிற்கு முரணாக உள்ளமையினால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய தேவை காணப்பட்ட போதிலும் சாதாரண பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றிக்கொண்டமையை சாதாரண நிலைமையாகக் கருத முடியாது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் முழுமையாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களுக்கு இணங்க முன்வைக்கப்பட வேண்டுமென்பதுடன், அதனூடாக இலங்கைப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# பெரும்போக நெல் கொள்வனவிற்கு குறைந்தபட்ச விலைகள் அறிவிப்பு



பெரும்போக நெல் கொள்வனவிற்கான குறைந்தபட்ச விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிதி அமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ் நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

14 வீத ஈரப்பதனுடைய நாட்டரிசி நெல் ஒரு கிலோகிராமிற்கான குறைந்தபட்ச விலை 105 ரூபாவாகும்.

ஒரு கிலோ சம்பா நெல் 120 ரூபாவிற்கும் ஒரு கிலோ கீரி சம்பா நெல் 130 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 14 வீதத்திற்கும் அதிகமான ஈரப்பதம் கொண்ட நாட்டரிசி நெல் ஒரு கிலோகிராமிற்கு குறைந்தபட்ச விலையாக 90 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

14 வீதத்திற்கும் அதிகமான ஈரப்பதம் கொண்ட சம்பா நெல் ஒரு கிலோகிராம் 100 ரூபாவிற்கும் கீரி சம்பா நெல் ஒரு கிலோகிராம் 120 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு, நெல் கொள்வனவு செய்வதற்காக சலுகை வட்டியின் கீழ் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு: இரண்டாம் கட்டப் பணிக்கு நிதி கிட்டவில்லை!

(ந.லோகதயாளன்)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிக் கான நிதி அனுமதி இதுவரையில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் கடந்த ஆண்டு இனம் காணப்பட்ட மனிதப் புதைகுழி நீதிமன்ற அனுமதியின் பெயரில் முதல் கட்டமாக அகழப்பட்டதோடு மனிதப் புதைகுழ எதுவரை நீண்டு செல்கின்றது என்பதும் நவீன ஸ்கானர் மூலம் கண்ட றியப்பட்டது. இவ்வாறு முதல்கட்டமாக இடம்பெற்ற பணிக்காக மாவட்டச் செயலகத்திற்கு விடுவிக்கப்பட்ட 5.8 மில்லியன் ரூபாவிலேயே பணிகள் இடம்பெற்றன.

இதனையடுத்து இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் மார்ச் மாதம் முதலாம் திகதி முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான செலவு மதிப்பாக 6 மில்லியன் ரூபா கோரப்பட்டது. இந்த 6 மில்லியன் ரூபாவிற்கான அனுமதி இன்று வரை கிடைக்காத நிலையில் நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் அகழ்வுப் பணியிலும் தாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேநேரம் இதுவரை முன்னெடுத்த அகழ்வுப் பணிகளில் முன்னாள் விடுத லைப் புலிகளினுடையவை எனச் சந்தே கிக்கப்படும் 40 பேரின் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் சிக்கி யாழ். போதனாவில் சேர்க்கப்பட்டவர்களில் 76 பேர் சாவு!

கடந்த 2023ஆம் ஆண்டு, விபத் துக்குள்ளாகி சிகிச்சைக்காக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த வருடம் விபத்துக்களில் சிக்கிய நிலையில் ஆயிரத்து 559 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.




# அரச நிதி பற்றிய குழுவின் தலைவராக மீண்டும் ஹர்ஷ



அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர ஹர்ஷ டி சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச நிதி பற்றிய குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவுக்குழுவால் நியமிக்கப்பட்டிருப்பதுடன், இதன் தலைவராக கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் நேற்று சபாநாயகரால் சபையில் அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய செஹான் சேமசிங்க, சீதா அரம்பேபொல, சுரேன்ராகவன், அனுப பஸ்குவல், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சட்டத்தரணி ரவூப் ஹக்கீம், வஜிர அபேவர்தன, விஜித ஹேரத், மஹிந்தானந்த அலுத்கமகே, துமிந்த திஸாநாயக்க, சட்டத்தரணி சந்திம வீரக்கொடி , நாலக கொடஹேவா, நிமல் லான்சா, எம்.ஏ. சுமந்திரன், கவிந்த ஹேஷான் ஜயவர்தன, மயந்த திஸாநாயக்க, ஹர்ஷண ராஜகருணா, யூ.கே. சுமித் உடுகும்புர, மேஜர் பிரதீப் உந்துகொட, இசுரு தொடன்கொட , சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த, சட்டத்தரணி மதுர விதானகே, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### யாழ். பல்கலைக்கழகத்தில்

# பட்டம் பெறத் தகுதியானவர்கள் விவரம் இணையத்தில் வெளியீடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையில் நடத்தப் பல்கலைக்கழக நிர்வாகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறத் தகுதியானவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை யாழ். பல்கலைக்கழக இணையத்தில் பார்வையிட முடியும்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**நாட்டை...**

ஜனாதிபதி இதன்போது தெளிவூட்டினார்.

புலம்பெயர் இலங்கையர்களுக்கான அலுவலகம் ஒன்றை பேர்த் நகரில் ஆரம்பிக்க அரசு தீர்மானித்திருக்கின்றது என்று இங்கு சுட்டிக்காட்டிய தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கை புலம்பெயர் சமூகம் அதனூடாக அரசுடன் வலுவான முறையில் தொடர்புகளைப் பேண முடியும் என்றும் தெரிவித்தார்.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட நிர்வாக தீர்மானங்கள் தொடர்பான அறிக்கை உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்த சாகல ரத்நாயக்க, இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குப் புலம்பெயர் இலங்கையர்களின் ஆதரவைத் தொடர்ந்தும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ள அரசு ஆரம்பித்திருக்கும் வேலைத்திட்டம் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியும் இங்கு விளக்கமளித்தார்.

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகள் சித்ராங்கனி வாகீஷ்வர, நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக மாயாதுன்ன, மேற்கு ஆஸ்திரேலியாவின் இலங்கை கொன்ஸ்லர் ஜெனரல் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

**மின்சாரம் தாக்கி...**

புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜீகே பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வறுமையால் மின் கட்டணம் செலுத்தாததால், மேற்படி குடும்பஸ்தரின் வீட்டுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர் அயல் வீடுகளில் இருந்தே மின் இணைப்பைப் பெற்று மின்சாரத்தைப் பயன்படுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்றுக் காலை அவர் மின் இணைப்பைப் பெற முற்பட்டபோதே மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் புப்புரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**இரகசியம் பரகசியம்...**

இருந்தபோது அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசு தரப்பினால் முறியடிக்கப்பட்டது. கெஹலியவுக்கு ஆதரவாக அரசு தரப்பில் 113 எம்.பிக்கள் வாக்களித்து இருந்தனர்.

இப்போது கெஹலிய கைது செய்யப்பட்ட போது அவர் சுற்றாடல் துறை அமைச்சராக இருந்தார். அவரின் கைதை ஒட்டி அவருக்கு எதிராக மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றம் இவ்வாரம் மீண்டும் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்ததும் கொண்டு வருவதற்கு எதிரணிகள் தீர்மானித்து, மும்முரமாகக் காரியமாற்றத் தொடங்கின.

ஆனால், அப்படி ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றுக்கு வந்து, அது விவாதத்துக்கு எடுக்கப்பட்டால், அரசுக்கு அது பெரும் அசௌகரியத்தையும் அரசியல் பின்னடைவையும் தரும் என்று ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறப்பட்டதாம். அதை அடுத்து அமைச்சர் பதவியை விட்டு விலகும் ராஜினாமாக் கடிதத்தை விளக்க மறியலில் இருந்தபடியே உடனடியாக அனுப்பி வைக்கும்படியான பணிப்புரை கெஹலியவுக்கு பறந்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இப்போது கடந்த ஆண்டு இறுதியில் கெஹலியவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டு தோற்கடிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒட்டி சமூக செயற்பாட்டாளரான சஜய மகவத்த என்பவர் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

தவறிழைத்த கெஹலியவைக் காப்பாற்றும் விதத்தில் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர் என்று மூன்று மருத்துவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்கு எதிராக அது தொடர்பில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கோரி, இலங்கை மருத்துவ கவுன்ஸிலிடம் அவர் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

இப்போதைய சுகாதார அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரன, டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, டாக்டர் சீதா அரம்பேபொல ஆகிய மூவருக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யப்படுகின்றது.

மூவரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றாலும், மருத்துவர்கள் என்ற முறையில் அது தொடர்பான கடப்பாடுகள், பொறுப்புகள், ஒழுங்கு முறைகளை அவர்கள் துறக்க முடியாது என்று கூறப்படுகின்றது.

* * *

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸாவுக்கு எதிராக முரண்டு பிடித்து நிற்கும் சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா போன்ற தரப்பினரை ஓரங்கட்டி விட்டு, தனது அரசியல் பயணத்தை முழு அதிகாரத்தோடு முன்னெடுக்கத் தயாராகிவிட்டார் சஜித் பிரேமதாஸா என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகி உள்ளது. புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாவதால் நாடாளுமன்ற மேற்பார்வை குழுக்களும் புதிதாக நியமிக்கப்பட வேண்டும்.

எந்த நிலையியல் குழுவுக்கும் சம்பிக்க ரணவக்கவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை கொடுக்கவில்லை. அதனால் எந்தக் குழுவிலும் அவருக்கு இடமில்லை.

ஐக்கிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா போன்றோருக்கு நேரம் வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிகின்றது.

தனது தலைமைத்துவ அதிகாரக் கைவரிசையை சஜித் காட்டத் தொடங்கி விட்டார் என்று கட்சி வட்டாரங்கள் திருப்தி தெரிவிக்கின்றன.

# அரசாங்கத்தின் வருமானம் 25 வீதத்தினால் அதிகரிப்பு



ஜனவரி மாதத்தில் அரசாங்க வருமானம் 25 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கப்பட்ட வற் மூலம் அரசாங்கத்திற்கு 274 பில்லியன் வருமானம் கிடைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி மாதத்தில் சுங்கத் திணைக்கள வருமானம் 11 வீதமும், கலால் திணைக்கள வருமானம் 16.6 வீதமும் அதிகரித்துள்ளன எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி



**இடதுசாரி ஆட்சி...**

நாள் நேற்றாகும். இந்தியாவின் கமியூனிஸ்ட் கட்சியை முதன்மையாகக்கொண்ட இடதுசாரிக் கூட்டமைப்பால் அதிகாரம் வகிக்கப்படுகின்ற கேரளா மாநிலத்திலேயே நேற்று அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள்.

மூன்று கோடியே ஐம்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட கேரளா மாநிலம் கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் வேகமான முன்னேற்றமடைந்துள்ளது. குறிப்பாக இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதியுயர் இடத்தை கேரளா உரித்தாக்கிக் கொண்டுள்ளது.

நேற்று முற்பகல் வேளையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் குழு கேரளா தலைநகரமான திருவனந்தபுரத்தில் மாநில அரசின் கைத்தொழில்கள் மற்றும் சட்டம் பற்றிய அமைச்சர் பி.ரஜீவ்வைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

பி.ரஜீவ் இந்திய கமியூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு அங்கத்தவராக விளங்குவதோடு கட்சியின் மாணவர் அமைப்பின் முன்னாள் தலைவரைப் போன்றே ஒரு சட்டத்துறை பட்டதாரியுமாவார்.

அதனையடுத்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் அவதானிப்புச் சுற்றுப் பயணத்தில் பங்கேற்றனர். அந்த நிறுவனத்தின் பணிப்பாளருடன் விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டதோடு இந்திய விண்வெளி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றியும் தகவல்கள் பரிமாற்றிக்கொள்ளப்பட்டன.

விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறையின் பிரதானமான விண்வெளி ஆராய்ச்சி நிலையமாக அமைவதோடு அது இந்தியாவின் செய்மதி நிகழ்ச்சித்திட்டத்துக்கு அவசியமான ரொக்கெட்டுகளையும் விண்வெளிக் கலங்களையும் உற்பத்திசெய்து வருகின்றது. அதே வேளையில்தேசியமக்கள்சக்தியின்தூதுக் குழுவினர் அதன் கட்டுப்பாட்டு நிலையத்தையும் விண்வெளி அரும்பொருட் காட்சியகத்தையும் பார்வையிடுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

அதன் பின்னர் மேற்படி குழுவினர் இந்திய தகவல் தொழில்நுட்ப துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்ற முதலாவதும் மிகப்பெரியதுமான தகவல் தொழில்நுட்ப பூங்காக்களிலொன்றான திருவனந்தபுரத்தின் Technopark இலும் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டனர். அதன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருடன் நிறுவனம் சம்பந்தமான விசேட தகவல்கள் பற்றியும் கருத்துக்களை பரிமாற்றிக் கொண்டனர்.

இந்த Technopark 1990 இல் கேரளா மாநில முதலமைச்சர் ஈ. கே. நாயனாரின் ஆட்சிக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அது 800 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்டுள்ளதோடு கட்டடத்தின் பரப்பளவு 10.6 மில்லியன் என குறிப்பிடப்படுகின்றது. அதற்குள் 480 கம்பனிகள் இயங்கி வருவதோடு 70 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட தொழில்வாண்மையாளர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். இது கேரளை மாநில ஆட்சியின் கீழேயே நிர்வகிக்கப் பட்டு வருகின்றது.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திருத்தப்படும் சட்டம்

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகரினால் சான்றளிக்கப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு எதிராக உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் எழுந்த கடும் எதிர்ப்புகள்,ஆட்சேபங்களுக்கு மத்தியில், அந்த விடயங்களை ஒட்டிய தனது விடாப்பிடி நிலையைத் தளர்த்தி இறங்கி வருவதற்கு அரசு இணங்கி இருப்பதாக - முன்வந்திருப்பதாக - தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது நல்லதொரு சமுக்கையாகும். வரவேற்கத்தக்க மாற்றம்.

இந்தச் சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகளில் பிரதானமான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பறிக்கின்றது, இது ஒரு வகையில் அடக்குமுறைச் சட்டம் என்று உள்நாட்டில் பரவலாக இதற்கு எதிர்ப்புக் கிளர்ந்தது.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் உட்பட்ட சர்வதேச கட்டமைப்புகளும், இந்தச்சட்டத்துக்கு எதிராகக் கடுமையாக குரல் எழுப்பின.

நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சட்டத்தில் உரிய மாற்றங்களைச் செய்து,அடிப்படை மனித உரிமைகள் மதித்துப் பேணப்படுவதை உறுதி செய்யுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கை அரசைக் கோரியிருந்தது.

இந்தச் சட்டம் தற்போதைய வடிவத்தில் நீடிக்குமானால் டிஜிட்டல் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அத்துறை சார்ந்த தொழில்துறை பங்குதாரர்கள் கவலையும் ஆட்சேபனையும் வெளியிட்டு வந்தனர்.

இந்தச் சட்ட மூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதாயின் அதில் 34 பிரிவுகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் வழிகாட்டல் தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆனால் அந்த 34 திருத்தங்களில் 9 திருத்தங்கள் தொடர்பில் மாற்றம் ஏதும் செய்யாமலேயே அந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் உரிய முறைப்படி நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சான்றளித்து அதில் ஒப்பமும் இட்டுள்ளார் என்று குறை கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே அந்த ஒன்பது திருத்தங்கள் உட்பட பல புதிய விடயங்களில் மாற்றங்களை கொண்டு வந்து அந்தச்சட்டமூலத்தைப் புதுப்பித்து நிறைவேற்றுவதற்கு அரசுத் தரப்பு முடிவு செய்திருப்பதாக சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டு இருக்கின்றன.

நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கான புதிய திருத்தங்கள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு புதிய திருத்தங்களை இணைக்கும் பணியை மேற்கொள்வோம் என்றார் அவர்.

கூகுள், யாகூ, மெட்டா, எக்ஸ், அமேசான் போன்ற சர்வதேச தொழில்துறை பங்குதாரர்களுடன் ஆலோசனை செயல்முறையை அரசாங்கம் நிறைவு செய்துள்ளதாக அந்த அதிகாரி கூறினார். அந்தப் பங்குதாரர்களின் கடுமையான கருத்து நிலைப்பாடு மற்றும் தொடர் விளைவுகளின் தாக்கங்களைப் புரிந்து கொண்டு, அதிகாரத் தரப்பு தன்னைத் திருத்திக் கொள்ளும் கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம் இந்த விடயங்களில் உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைப் பாங்கின் அடிப்படையில் அமையவில்லை என்றும், வெளிப்படையான ஆலோசனை செயல்முறையை அது பின்பற்றவில்லை என்றும் சர்வதேசத் தரப்புகள் கவலை தெரிவிக்கின்றன.

எனவே, நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம் சட்டக் கண்ணோட்டத்தில் மட்டுமல்லாமல், தொழில்நுட்பக் கண்ணோட்டத்திலும் நிபுணர்களால் மேலும் மறுஆய்வுக்குள்ளாக்க வேண்டிய கட்டாயத் தேவைப்பாடு இருப்பதாகச் சுட்டப்படுகின்றது.

இப்போதைய சட்டத்தில் குற்றங்களாகக் கூறப்படும் சில விடயங்கள், ஏற்கனவே இலங்கையும் சேர்ந்து ஒப்பமிட்டு சட்டரீதியாகவும் அங்கீகரித்திருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையை (ஐ.சி.சி.பி.ஆர்.) மீறுவதாகவும் சுட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்தி, உரிய மாற்றங்களைச் செய்ய முன்வந்திருக்கும் அரசின் முடிவு வரவேற்கத்தக்கது.



# வவுனியா புளியங்குளம் பகுதியில் காட்டு யானையின் சடலம் மீட்பு!

## பண்ணை உரிமையாளர் கைது!

(வசந்தன்)

வவுனியா, புளியங்குளம், பழைய வாடியில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான பண்ணை காணியில் இருந்து யானை ஒன்று நேற்று சடலமாக மீட்கப்பட்டது.

வவுனியா, புளியங்குளம், பழையவாடிப் பகுதியில் உள்ள தனியார் பண்ணைக் காணியில் யானை ஒன்று இறந்து கிடப்பதை அவதானித்த காணியின் உரிமையாளர் புளியங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற புளியங்குளம் பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையின் இறப்புத் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்த யானை 24 வயது மதிக்கத்தக்கது என தெரிவிக்கப்படுகிறது. உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர் பில் அக்காணியின் உரிமையாளர் புளி யங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# வட்டவளையில் ரயில் தடம் புரள்வு மலையக ரயில் சேவைகள் பாதிப்பு

**மஸ்கெலியா நிருபர்.**

நாவலப்பிட்டி வட்டவளை பகுதியில் நேற்று மதியம் 159 இலக்கம் கொண்ட ரயில் தடம் புரண்டு உள்ளது என நாவலப்பிட்டி ரயில் நிலைய அதிகாரி தெரிவித்தார்.இதனால்மலையக பகுதிக்கான ரயில் போக்குவரத்துக்குத்தடை ஏற்பட்டு உள்ளது.

அதனை சீர் செய்யும் பணியில் நாவலப்பிட்டி ரயில் நிலையப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என நாவலப்பிட்டி ரயில் நிலைய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# எண்ணெய்க் குழாய் திட்டம் தொடர்பில் இந்திய நிறுவனத்துடன் கலந்துரையாடல்



இந்தியாவின் நாகப்பட்டினத்தையும் திருகோணமலை எண்ணெய்க் குதத்தையும் இணைக்கும் வகையில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய்க் குழாய் அமைக்கும் திட்டம் தொடர்பில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி வாரத்தை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இந்தியாவிற்கு சென்றுள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, உத்தேச எண்ணெய்க் குழாய் நிர்மாணப் பணிகள் தொடர்பில் இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் நேற்று முன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

இந்திய அரசாங்கம் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் ஊடாக இந்த திட்டத்தினை முன்மொழிந்துள்ளது என எரிசக்தி அமைச்சர் கஞ்சன தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறையை தயாரிப்பதற்கான தொழில்நுட்ப ஆய்வு, சந்தைப் பகுப்பாய்வு, நிதி பகுப்பாய்வு மற்றும் வர்த்தக மாதிரி ஆகிய விடயங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் முதலீடுகள் மற்றும் செயற்றிட்டத்தினை விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள Trincomalee Power நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும், சம்பூர் சூரிய மின் சக்தி திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக இந்தியாவில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது என அமைச்சர் கஞ்சன விஜேசேகர பதிவிட்டுள்ளார்.

இலங்கையில் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி திட்டத்தில் முதலீடு செய்வதற்கு இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெலியத்தையில் ஐந்து பேர் கொலை: இதுவரை 12 சந்தேகநபர்கள் கைது!

அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேரா உள்ளிட்ட ஐவர் பெலியத்தையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் அந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைகளைச் செய்வதற்காக சந்தேகநபர்கள் பயணித்த ஜீப்பிற்கு மேற்படி சந்தேகநபர் போலி ஆவணங்களை தயாரித்து வழங்கியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

57 வயதான அவர் நாரஹேன்பிட்டி, கிருலப்பனை வீதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச்சம்பவம் தொடர்பில் இதுவரை 12 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# கேரள கஞ்சா, மதுவுடன் மூவர் வசமாகச் சிக்கினர்

(எம்.எப்.எம். அலி)

பலாங்கொடை மற்றும் கல்தொட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை – ரத்மலவின்ன பகுதியில் இருவரும், கல்தொட்ட – இலுக்பெலஸ்ஸ பகுதியில் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 24 கிராம் கேரள கஞ்சா, சட்டவிரோத மதுபானம் மற்றும் அவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்த மூவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் பெப்ரவரி 19இல் ஆரம்பம்

## ஏப்ரலில் காணி உரிமை என்கிறார் அமைச்சர் ஜீவன்

“இந்திய அரசின் நிதி உதவியுடன் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.”

– இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் சௌமியபூமி திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:–

“மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு நிலையான – நிரந்தரமான தீர்வுகளைப் பெறுக்கொடுப்பதே எமது இலக்காக இருக்கின்றது. அந்த நோக்குடனேயே நான் அமைச்சுப் பதவியை ஏற்றேன். இதற்காக குழுக்களும் நியமிக்கப்பட்டன. தீர்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன . அவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2014 இல் இந்திய அரசால் வழங்கப்பட்ட 4 ஆயிரம் வீட்டு திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு 10 வருடங்கள் எடுத்துள்ளன. இக்காலப்பகுதியில் பெருந்தோட்டப் பகுதிகளில் சனத்தொகைகூட 4 ஆயிரமாக அதிகரித்திருக்கும். இது தொடர்பில் நான் எவரையும் குறை கூறவில்லை. யதார்த்தத்தையே கூற விளைகின்றேன். அதேபோல் 2017 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 10 ஆயிரம் வீட்டு திட்டமும் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் ஆறு வருடங்கள்வரை தாமதமானது.

எனினும், எதிர்வரும் 19 ஆம் திகதி வீட்டு திட்டம் ஆரம்பிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான தகவலை அறியத்தருகின்றேன். முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்படும், ஆகஸ்ட் மாதத்துக்குள் இத்திட்டத்தை நிறைவுசெய்ய எதிர்பார்க்கின்றோம். 1,300 வீடுகளுக்கும் ஒரே நாளில் அடிக்கல் நாட்டப்படும். தனித்தனியே அடிக்கல் நாட்டு விழாக்களை நடத்தி



மக்களை பணத்தை வீணடிக்க விரும்பவில்லை.

அதேபோல 2 மற்றும் 3 ஆம் கட்டங்களையும் அடுத்தடுத்த மாதங்களில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் 2 இலட்சத்து 51 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன, சுமார் 66 ஆயிரம் வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு வீட்டுப் பிரச்சினை உள்ளன. இப்பிரச்சினையை தீர்க்க வேண்டுமெனில் காணி உரிமை வழங்கப்பட வேண்டும். மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்க நாட்டு மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என அண்மைய ஆய்வுகள் – கருத்து கணிப்புகள் தெரிவித்துள்ளன.

மலையகப் பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டுக்காக உழைத்துள்ளனர். 1964 இல் எமது மக்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். எனவே, காணி உரிமையை நாம் பிச்சையாக கேட்கவில்லை, அது எமக்கு கிடைக்க வேண்டிய உரிமையாகும். எமது மக்கள் மானத்துடனும், மரியாதையுடனும் வாழவே விரும்புகின்றனர்.

காணி உரிமை சம்பந்தமாக பிரதமர் செயலகத்தில் இன்று (நேற்று) முற்பகல் 11 மணிக்கு சந்திப்பொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அதிகாரிகள், பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதை எதிர்க்கின்றோம் எனப் பெருந்தோட்ட நிறுவனங்கள் குறிப்பிட்டன. காணி உரிமை வழங்கினால் தோட்டத்தில் வேலை செய்ய ஆட்கள் இருக்கமாட்டார்கள் எனவும் கூறின. இப்படியான தரப்புகளை வைத்துக்கொண்டு நாட்டை எப்படி முன்னேற்றுவது? பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களை கௌரவமாக வழிநடத்தினால் அத்தொழில்துறை பாதுகாக்கப்படும். ஆனால் மக்களை மக்களாக மதிக்காமல் கம்பனிகள் செயற்படுவதால்தான் தொழிலாளர்கள் வெளியேறுகின்றனர். இதை நாம் சுட்டிக்காட்டினோம். பெருந்தோட்டத்துறை என்பது கீழ்த்தரமான தொழில் இல்லை. ஆனால் அதற்குரிய மரியாதையும், அங்கீகாரமும் வழங்கப்படாமல் இருப்பதே பிரச்சினையாகும்.

காணி உரிமை வழங்கினால் அதனை விற்பனை செய்துவிடுவார்கள் எனவும் பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். விற்கின்றார்களோ இல்லையோ எமது மக்களுக்கு சேர வேண்டிய காணி உரிமை கிடைக்கப்பெற்றாக வேண்டும். அதேபோல் காணி உரிமை பத்திரத்தை பெருந்தோட்ட கம்பனிகளிடம் கொடுங்கள் எனவும் கூறினர். இது வேடிக்கையான விடயமாகும்.

பெருந்தோட்டப்பகுதிகளில் 40 ஆயிரம் ஹெக்டேயர் தரிசு நிலங்களாக உள்ளன. எமது மக்களுக்கு காணி உரிமை கிடைப்பதற்கு இதில் வெறும் 10 வீதமே போகும். மாறாக நாம் தேயிலைகளை பிடுங்கச் சொல்லவில்லை.

இன்றைய (நேற்றைய) கலந்துரையாடல் நல்லபடியாக முடிந்தது, ஏப்ரல் மே மாதத்தில் காணி உரிமையை வழங்குவதற்கான சௌமியபூமி வேலைத் திட்டத்தை ஆரம்பிப்போம். தோட்டத்தில் வேலை செய்தால் மட்டுமல் அல்ல, தோட்டத்தில் பிறந்திருந்தாலே வீடு. இது விடயத்தில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.” – என்றார்.



# தமிழரசின் புதிய தலைவருக்கு ஜேர்மன் தூதர் நேரில் வாழ்த்து

## அடுத்தகட்ட செயல் நோக்குகள் குறித்தும் கரிசனை

இலங்கைக்கான ஜேர்மன் தூதரகரகத்தின் அழைப்பின் பேரில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜேர்மன் தூதுவர் பெலிக்ஸ் நியூமனைக் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துத் தெரிவுக்கும் நோக்கில் ஜேர்மன் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில், ஈழ அரசியல் பரப்பை முன்னிறுத்திய அவரது அடுத்தகட்ட செயல் நோக்குகள் குறித்து தாம் கரிசனையோடிருப்பதாக தூதுவர் தெரிவித்தார்.

# பஸ்ஸில் சில்மிஷம் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணத்தில் பஸ்ஸில் பெண்களுடன் தவறாக நடந்து கொண்ட குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்ட பயணிகள் பஸ்ஸில் பொதுமக்களுடன் பொதுமகன்கள் போன்று பிரயாணம் செய்த பொலிஸ் புலனாய்வாளர்களே இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் அராலிப் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் என்றும், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






**உரலார் கேள்வி :- நடிகர் விஜயின் அரசியல் பிரவேசம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** இது அவர்கள் நாட்டுப் பிரச்சினை. அதனால் சில எல்லைகளுக்குள் நின்றுதான் நான் பேச வேண்டியிருக்கிறது. இன்றைக்கு ஒரு படத்தில் நடிக்க விஜய் நூறு கோடிக்கு மேல் வாங்குவதாகப் பகிரங்கமாகப் பேசிக்



கொள்கிறார்கள். அந்த வருமானத்தை விட்டு விட்டு அரசியலுக்குள் நுழையப் போவதாக முடிவெடுத்திருக்கும் விஜயின் துணிச்சலை முதலில் பாராட்ட வேண்டும்.

"வருகிறேன் வருகிறேன்" என்று பல காலம் சொல்லிச்சொல்லி, மக்களின் ஆர்வத்தைத் தூண்டிவிட்டு, பின்னர் திடீரெனத் தனக்கு அரசியல் சரிவராது என்று பின் வாங்கி விட்ட ரஜினியோடு ஒப்பிடுகையில் எதற்கும் அஞ்சாமல் இனி எனக்கு அரசியல்தான் பாதை என்று துணிந்து முடிவெடுத்திருக்கும் விஜயின் தன்னம்பிக்கை வியப்பேற்படுத்துகிறது. 69வது படத்தோடு இனிச் சினிமாவில் நடிக்கப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்லி அனைவரையும் விஜய் ஆச்சரியப்படுத்தியிருக்கிறார்.

"கரணம் தப்பினால் மரணம்" என்கின்ற இந்த அவரது முடிவு ஆபத்தானது என்பதில் சற்றேனும் ஐயத்திற்கு இடமில்லை. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு, தந்தை சந்திரசேகர் இவருக்கான அரசியல் பாதையைத் திறக்க முற்பட்டபோது கடும் கோபத்தோடு அவரைக் கண்டித்து, அவரது உறவைக்கூட முறித்துக் கொண்டவர் இவர். இப்போது தானாக அரசியலுக்குள் நுழைகிறார்.

தந்தையும், மகனுமாகச் சேர்ந்து அரசியலில் நுழைவது பற்றி மக்களின் நாடி பிடித்துப் பார்த்தார்களோ? அல்லது திருவள்ளுவர் சொன்னாற் போல காலம், இடம், வலி அறிந்து விஜய் எடுத்த முடிவுதான் இதுவோ? என்றெல்லாம் எண்ண வேண்டியிருக்கிறது.

எது எப்படியோ?, யாரோ அவரை வழிநடத்துகிறார்கள் என்பதும், அவர்கள் மீது இவர் அளவற்ற நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்த முடிவு அவரது நல்வினையால் விளைகிறதா? தீவினையால் விளைகிறதா? என்பதற்கான பதிலைக் காலம்-தான் சொல்லவேண்டும்.

நிறைவாக ஒன்று. கற்பனையான சினிமாக் கதாநாயகத் தன்மையை மட்டும் நம்பி, ஒருவரை மக்கள் தலைவராக மாற்ற நினைக்கும் தமிழ் நாட்டு மக்களின் போக்கு வருத்தம் தருவது மட்டும் உண்மை.


**சல்லடையார் சலிப்பு - அங்க சினிமாவும், இங்க போராட்டமும் பொய்த் தலைவர்களை வளர்க்கப் போதுமானவையாய் இருக்கின்றன. ஹீ..ஹீ..ஹீ**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- மரபுக் கலை சம்பந்தமான விடயங்களைக்கூட சுவாரஷ்யமான ஈர்ப்போடு எழுத முடியும் என்று நினைக்கிறீர்களா?**

**உலக்கையார் பதில் :-** அதில் என்ன சந்தேகம். முன்பு 'சுப்புடு' என்கின்ற ஒரு இசை விமர்சகர் இருந்தார். அவர் எழுதும் இசை விமர்சனங்கள் ஆழமும், புதுமையும், சுவாரஷ்யமும், கிண்டலும், நகைச்சுவையும் நிறைந்ததாக இருந்தன. கச்சேரிகளைக் கேட்பதை விட சுப்புடுவின் எழுத்துக்களைப் படிக்க இசை ரசிகர்கள் பலர் முண்டியடித்தார்கள்.

இப்போதும் அத்தகைய எழுத்தாளர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனந்த விகடனில் "வீயெஸ்வி" என்று ஒருவர் இசை விமர்சனம் எழுதி வருகிறார். அவரது விமர்சனங்களைப் படிக்கும் போதெல்லாம் வியந்து போகிறேன். மரபு ரீதியான



சங்கீதத்தை நவீன முறையில் அவர் விமர்சிக்கும் அழகிற்கு நிகரில்லை.

இவரும் இசை ஆழம், கிண்டல், புதியபாணி, இளைஞர்களின் நவீன உரையாடல் முறை என இளமை துள்ள இசை விமர்சனங்களை எழுதி வருகிறார். அவரது எழுத்துக்கள் உயர்ந்த கச்சேரிகளைக் கேட்பதுபோல் "சபாஷ்"போட வைக்கின்றன. ஒரு சோற்றுப் பதமாய் அவரது சில விமர்சன வரிகளைக் கீழே தருகிறேன். படித்துப்

**(12ஆம் பக்கம் பார்க்க)**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாருங்கள்.

- நிற்க வைக்கப்பட்ட இடத்திலிருந்து கிளம்பும் விமானம் 'ரன்வே' வரை ஊர்ந்து சென்று, அங்கிருந்து வேகம் அதிகரித்து "சொய்ங்" என்று மேலேறி இன்னும் மேலேறி மேகக் கூட்டங்களில் மறைவது போல பந்துவரா ளியை மெதுவாகவே ஆரம்பித்தார் பாலமுரளி. கீழிருந்து ஒவ்வொரு ஸ்தாயியாக மேலேறும் போது பல்வேறு சங்கதிகளால் கிறங்கடித்த வண்ணம் இருந்தார். அந்தக் கார்வைகள், 'வாய்ஸ் மாடுலேசன்'. ஆலாபனை முடிந்து விடக் கூடாதே என்கின்ற படபடப்பை ஏற்படுத் தியது.
- அருமையான வில்வீச்சுடன் ஒவ்வொரு சந்தியையும், ஸ்வரத்தையும் பாலுவிடம் இருந்து வாங்கி அக்கரை சுப்புலட்சுமி ரிப்பீட் செய்தது இளையராஜா – எஸ்.பி.பி கம்போ சிற்கு ஈடானது.
- காயத்திரி வெங்கட் ராகவன் பக்தி பூர்வமாக நிரவல் பாடியபோது கோயில் பிரகாரத்தைச் சுற்றி வந்த உணர்வு ஏற்பட்டது.
- தவில் முத்துக்குமாரசாமியின் தலைமையில் முருகபூபதியும், கிரிதர் உடுப்பாவும் உருண்டு புரண்டு சண்டையிட்டு, நம்மைக் காது மூக்கு தொண்டை நிபுணரிடம் அனுப்பி வைக்காமல் மிருதுவான ' தனி' யை அடக்க ஒடுக்கமாக வழங்கியதற்கு அனந்த கோடி நன்றி.
- ஶ்ரீரஞ்சனி சந்தான கோபாலன், அரங்கின் பின் வரிசையில் ஆங்காங்கே சிதறி உட்கார்ந் திருந்தவரைப் பார்த்து "எல்லோரும் முன்னாடி வந்து காலியா இருக்கிற நாற்காலிகளில் உட்காருங்க ப்ளீஸ்" என்று சொல்ல, பின்னால் இருந்தவர்கள் விமானத்தில் 'பிசினஸ் கிளா ஸு'க்கு அப்கிரேடு' ஆகிவிட்ட மகிழ்ச்சியுடன் விரைந்து வந்து முன்வரிசையில் உட்காந் தார்கள் .
- லயத்தைப் பொறுத்தவரை மிருதங்கம், கடம் தவிர இன்னொரு பக்கவாத்தியமும் உண்டு. அது வெளியே உணவகத்தில் இருந்து வந்த கிரைண்டர் உருளும் சத்தம்!
- விஜய், சிவா குரல் வழியே ஒலிக்கும் போது அந்த ராகத்திற்குத் தனி அந்தஸ்து கிடைத்து விடுகிறது. ஒரு சில பண்டிதர்களின் பகவத் கீதை லெக்சர்களில் தெரியும் மேதா விலாசம் அது.
- விஜய் மற்றும் விஜி அளித்த 'ஹைகிளாஸ்' சங்கதிகளை மஞ்சள் பையில் நிரப்பிக் கொண்டு சென்றார்கள் இசைப்பிரியர்கள்.
- வெள்ளிக் கம்பியை விட மெலிதான குரல் நந்தினிக்கு. பன்னீர் மாதிரித் தெளிக்கும் குளுமையான சந்திகள். சென்றவருடம் காணப்பட்ட மூச்சிரைப்பு, இந்த முறை இல்லை என்பது வரவேற்கத் தக்க முன்னேற்றம். ஆயுர்வேத சிகிச்சையோ?
- எந்த வில்லங்கமும் இல்லாமல் கச்சேரி யைக் கிருஷ்ணா ஒழுங்காகப் பாடி முடிக்க வேண்டுமே என்று பக்கத்து கபாலி கோவிலில் வேண்டிக் கொண்டு பாரதிய வித்தியா பவனை நிரப்பியவர்கள் அன்று மனங்குளிர்ந்தி ருப்பார்கள். கணீரென்ற காந்தக் குரலால் பிலஹரியை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்து மறுபடியும் 'அசம்பிள்' செய்து அசத் தினார் கிருஷ்ணா.
- தியாகராஜரின் 'கலிகியுண்டே கதாவும்'.. டி.எம்.கே. பாடியது புதுவருட போனஸ்.
- இசை தெரிந்த யார் பாடினாலும் 'வெல்கம்' என்று அணைத்துக் கொள்ளும் ராகம் கீரவாணி.

எப்படித்தான் இந்த மனிதரால் இப்படி எழுத முடிகிறதோ என்று ஒவ்வொரு தரமும் வியந்து போகிறேன். இத்தகைய விமர்சகர்கள் இருப்ப-தால்தான் தமிழ் நாட்டில் இசைத் துறையின் தரம் குன்றாமல் இருக்கிறது போல.

எனக்குள் ஒரு கவலை, ஏன்? இயல்த்துறை நிகழ்ச்சிகள் பற்றி யாரும் விமர்சனங்கள் எழுது வதில்லை? மேற் சொன்னது போல இயல்த்துறை நிகழ்ச்சிகளையும் 'பொட்டில்'அடித்தாற் போல் எவ ரேனும் விமர்சித்திருந்தால் இயல்துறை மேடை களின் சில கழிவுகளை அகற்ற முடிந்திருக்குமோ? இனியேனும் எவரும் முயலலாமே?

**சல்லடையார் சலிப்பு - வாரதியார் தனக்குத் தானே வினை தேடுகிறார்.**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- பொங்கலன்று காலில் செருப்போடு நின்றதற்கு உங்களின் 'டயபற்றிக்' நோயைக் காரணம் காட்டியிருந்தீர்கள். டயபற்றிக் ஒரு நோய்தானா? சிலர் இல்லை என்கிறார்களே? அது பற்றி உங்களால் ஏதும் சொல்ல முடியுமா?**

**உலக்கையார் பதில் :-** அந்த அளவிற்கு மருத் துவ அறிவு இருந்தால் நான் ஏன் இப்படி இருக்கப் போகிறேன். உங்கள் கேள்விக்கான பதில் எனக் குத் தெரியாவிட்டாலும் அது பற்றி நான் தெரிந்து கொண்டதை உங்களுக்குச் சொல்லலாம் என நினைக்கிறேன். ஆனந்த விகடனில் சில காலத் திற்கு முன்பு, அன்ரன் பிரகாஷ் என்பவர் Unlock அறிவியல் 2.0 என்ற தலைப்பில் சில வாரங்கள் விஞ்ஞானக் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதி வந் தார். அதில் சர்க்கரை நோய் பற்றி இலக்கியம் போல் அவர் எழுதிய கட்டுரைகளைச் சேகரித்து வைத்திருக்கிறேன். நீங்கள் கேட்டதால் அவரது எழுத்தை அப்படியே உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். சர்க்கரையை விட அந்தக் கட்டுரை சுவையாக இருக்கிறது. படித்துப் பாருங்கள்.

பாலுடன் வெள்ளைச்சர்க்கரை சேர்த்து அதனு டன் முந்திரிப்பழங்களைச் சேர்த்துக் கேசரி செய்தால் மேலிருக்கும் அனைத்து வடிவ சர்க்கரைகளும் அதில் இருக்கும். இந்தக் கேசரியில் ஒரு ஸ்பூன் எடுத்துச் சாப்பிட்டதும் நடக்கும் செயல்பாடுகள் மிகப்பெரிய தொழிற்சாலையின் இயக்கத்திற்குச் சமமானது.

வாயின்சுவை அரும்புகளில் கேசரி பட்டதும், அந்தச் செய்தி நியூரான்களால் மூளைக்கு வந்து, மூளை பரபரப்பாகிறது. "உணவு வருதுப்பா" என்ற கூக்குரலுடன் விரைவாக வயிற்றுக்குச் செய்தி போகிறது. வரப்போகும் உணவைச் செரிமானம் செய்ய அமிலங்கள் (Acids) மற்றும் நொதிக ளுடன் (Enzymes) குடல் தயாராகி "ஓகே நான் ரெடி, உணவை அனுப்புங்க" என்கிறது.

உணவு சில நொடிகளில் வந்து சேர்ந்ததும், தயாராக இருக்கும் அமில, நொதிக் கலவையில் கலந்து, இருக்கும் ஊட்டச்சத்துக்களைப் பிரித்து எடுக்கிறது. அதில் முக்கியமானது, குளுக்கோஸ். இதை உடலின் பல இடங்களுக்கு கொண்டு செல்ல வசதியாக ரத்தத்தில் கலந்து விடுகிறது.

அடுத்த 'ஸ்டெப்' ரத்தத்தில் இருக்கும் குளுக் கோஸ் நம் உடலின் செல்களில் ஆற்றலாக சேமிக்கப்பட வேண்டும். செல்கள் குளுக்கோஸிற் குத் தங்கள் கதவுகளைத் திறந்துவிட, இன்சுலின் என்ற ஹார்மோன் தேவை. ரத்தத்தில் குளுக் கோஸ் வந்ததுமே, மூளையின் 'நியூரான்கள்' கணையத்தை "இன்சுலின் காப்பாயாக" எனக் கட்டளையிட, அது தன்னிடம் இருக்கும் ஸ்பெஷல்

(13ஆம் பக்கம் பார்க்க)

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டா செல்களில் இருந்து இன்சூலினைச் சுரந்து அதை ரத்த ஓட்டத்தில் சேர்க்கிறது. குளுக்கோஸை இன்சூலின் ஆற்றலாக மாற்றி நம் உடலின் செல்களில் சேமிக்கிறது. இந்த ஆற்றலைத்தான் நாம் இயங்குவதற்குப் பயன்படுத்துகிறோம்.

ஒருவேளை இந்தச் சேமிப்பிற்கும் அதிகமான அளவில் குளுக்கோஸ் ரத்தத்தில் இருந்ததென்றால் இன்சூலின் தடுமாறத் தொடங்கும். அதைச் சுரக்கும் கணையம் விரக்தியாக "நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து இன்சூலின் கொடுத்தாலும் அதில் உனக்குத் திருப்தியில்லை, எனவே இன்சூலின் அளவைக் குறைத்துக் கொள்கிறேன்" என்று முரண்பிடித்து வேலைநிறுத்தம் செய்ய ஆரம்பிக்கும். இதனால் ரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகமாகும். அடுத்த முறை மருத்துவரைச் சந்திக்கும் போது அவர், ' உங்களுக்குச் சர்க்கரை நோய் வரப்போகிறது, அல்லது வந்துவிட்டது' என்பார்.

'பை த வே', ஒரு ஸ்பூன் கேசரி நாக்கில் பட்டதும் இயங்கத் தொடங்கிய உடலின் வளர்சிதை மாற்றத் (Metabolism) தொழிற்சாலை, 2 -3 மணி நேர பரபரப்பிற்குப் பின்னர் அமைதியாகும். தான் கொடுத்த எச்சரிக்கையைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்து சர்க்கரை வந்தபடி இருந்தால், இன்சூலின் எதிர்ப்புக் கணையம் கொள்கை முடிவாக ஏற்றுக் கொண்டுவிடும்.

இதனால் இரத்தத்தில் சேகரிக்கப்படும் அதிக சர்க்கரை, குறிக்கோள் இல்லாத கும்பல் போல உடலின் பல இடங்களுக்கும் சென்று வம்பு வளர்க்கும். இந்தக் கும்பலின் வன்முறையில் நேரடியாகப் பாதிக்கப்படுபவை – இதயம், கல்லீரல், சிறுநீரகம் மற்றும் நரம்பு மண்டலம்.

அடிக்கோடிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் அளவிற்கு அதிகமான சர்க்கரை, நேரடிஉயிர்க் கொல்லி.

**சல்லடையார் சலிப்பு - கடுமையான ஒரு விடயத்தை இவ்வளவு எளிமையாகச் சொல்ல முடியுமா? என்ன எழுதுகிறார் என்று எவராலும் விளங்க முடியாமால் பந்திபந்தியாகக் கட்டுரைகளை எழுதித் தள்ளும் வாரதியாரின் பெயர் கொண்ட பேராசிரியர் இதைப் படிப்பாராக!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- மாவையார் மகனைத் தனது அரசியல் வாரிசாக வளர்க்கப் பார்க்கிறாராமே?**

**உலக்கையார் பதில் :-** அவரைக் குற்றம் சொல்லிப்பிரயோசனம்இல்லை.தமிழரசுக்கட்சிக்குள் பதவிகளைப் பிடித்த அனைவருமே அப்பதவிகளைத் தங்கள் குடும்பச்சொத்தாகத்தான் நினைக்கப் பார்க்கிறார்கள். ஏற்கனவே மூத்த தலைவர் ஒருவர் பதவியில் ஊசலாடிக் கொண்டு இருக்கிறார்.

பேசவே முடியாமல் போன நிலையில் நீங்கள் பதவி விலகலாமே? எனக் கேட்க, எனது முதுமையைத் தெரிந்துதான் மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள் என்கிறாராம் அவர். கேள்வியைத் தொடுத்தவர்மேல் அவரது மகனாரும் பாய்கிறாராம். கோணமலையைக் கோணல் மலையாக்கப் பார்க்கிறார்கள் அவர்கள்.

பணத்தால் பதவியைப் பற்றி, பின்னர் அதை இழந்து நிற்கும் '**உதயமானவர்**' போராட்டங்கள் நடக்கும் இடங்களிலெல்லாம் தன் முகத்தை வலிந்து காட்டி, விட்டதைப் பிடிக்க முயல்வதாகவும் கேள்வி. அவரும் கிடைத்த பதவியை மகளுக்கோ மனைவிக்கோ ஆக்க முயன்றதாக முன்பு சொல்லப்பட்டது.

இந்த மண்ணுக்காக ஊர், உறவு, உயிர் என அனைத்தையும் தியாகம் செய்துபோன இளம் போராளிகளின் ஆத்மா, இந்தச் சுயநலவாதிகளைக் கண்டு அந்தரிக்கும் என நினைக்கிறேன். 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்' என்பது மட்டும் உறுதி.

**சல்லடையார் சலிப்பு - வாரிதியார் சந்தர்ப்பம் பார்த்துக் குடுக்குறார். அது ஆருங்கோ? அந்த உதயமானவர் ஹீ...ஹீ...ஹீ...**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦



# ஜோர்தானில் வேலைவாய்ப்பை இழந்த 60 தொழிலாளர்கள் நாடு திரும்பினர்!

ஜோர்தானில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் காரணமாக வேலைவாய்ப்பை இழந்த இலங்கை தொழிலாளர்களில் 60 பேர் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

ஜோர்தானில் உள்ள இரண்டு ஆடை தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், 221 இலங்கைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர்.

இது தொடர்பில் ஜோர்தானுக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகள், அந்த நாட்டு தொழில் அமைச்சின் அதிகாரிகளை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினர் எனவும், விசா காலம் நிறைவடைந்தும் அங்கு தங்கியிருக்கும் தொழிலாளர்களை அபராதம் விதிக்காமல் நாட்டுக்கு திருப்பி அனுப்ப ஜோர்தான் அதிகாரிகள் இதன்போது இணக்கம் வெளியிட்டனர் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டது.

அத்துடன், கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அவர்களுக்கு வழங்கப்படவிருந்த சம்பள நிலுவைத் தொகையையும் வழங்குவதற்கு தொழிற்சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.



# சி.ஐ .டியின் பட்டியலில் உள்ள 7,494 சந்தேகநபர்கள் கைது!

யுக்திய சுற்றிவளைப்பின் போது குற்றவியல் விசாரணை பிரிவினருக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள 7 ஆயிரத்து 494 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யுக்திய சுற்றிவளைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து இது வரை இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

44 ஆயிரத்து 794 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் நாட்டின் அனைத்துப் பொலிஸ் பிராந்தியங்களுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

இதங்கமைய, போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 4 ஆயிரத்து 88 பேரில் 1,191 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 33 ஆயிரத்து 936 பேரில் 5 ஆயிரத்து 708 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# இந்திய அமுல் நிறுவன பிரதிநிதிகளால் இலங்கையில் ஆய்வு நடவடிக்கைகள்




தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பண்ணைகளைப் பார்வையிடுவதற்காக இந்தியாவின் அமுல் நிறுவனப் பிரதிநிதிகள் குழுவொன்று நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

அவர்கள் நேற்று முன்தினம் முதல் பண்ணைகளை ஆய்வு செய்ய ஆரம்பித்துள்ளனர் என தேசியப் பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

அந்தப் பண்ணைகளின் எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்களை அமுல் நிறுவன பிரதிநிதிகள் குழு நடைமுறைப் படுத்தவுள்ளது.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 31 பண்ணைகள் 28 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் காணப்படுகின்றன.

அவற்றை அமுல் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு முன்னர், அந்த நிறுவனம் பண்ணைகளின் பெறுமதியை மதிப்பிடத் தொடங்கியுள்ளதாக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இதுவரை 80 வீத நில மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பண்ணைகளில் உள்ள விலங்குகளின் பெறுமதியை மதிப்பீடு செய்த கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்திணைக்களம் அந்த அறிக்கையை ஜனாதிபதி செயலகத்தில் கையளித்துள்ளதாக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் பால் தொழிலை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணையை இந்திய அமுல் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணைகளை இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதற்கு எதிராக கடந்த சில மாதங்களாக பால் பண்ணை உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்து சமுத்திரத்தின் கப்பல் போக்குவரத்துச் சுதந்திரம் தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும்!

## ஐந்து வருடங்களுக்குள் சுதந்திரமான பாலஸ்தீன அரசு ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனவும் ரணில் வலியுறுத்து

உலகின் பலமான நாடுகள் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் வரை காத்திருக்காமல், தமக்கான பாதையை அமைத்துக் கொள்ளும் இயலுமை இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு உள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்து சமுத்திர வலய நாடுகளின் நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான இந்து சமுத்திரத்தை உருவாக்க முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

2050 ஆண்டளவில் இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி 8 மடங்காக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை வலுவூப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா பேர்த் நகரில் நடைபெற்ற 7 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் ஆற்றிய பிரதான உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகள் மற்றும் சமுத்திரத்தை பெருமளவில் பயன்படுத்தும் பிற நாடுகளைப் பாதிக்கும் பொதுவான எதிர்பார்ப்புகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் 7ஆவது இந்து சமுத்திர மாநாடு ஆஸ்தி ரேலியாவின் பேர்த் நகரில் நேற்று ஆரம்பமான நிலையில் இன்றும் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை "நிலையான மற்றும் நிலைபேறான இந்து சமுத்திரத்தை நோக்கி" என்ற தொனிப் பொருளில் இந்திய வெளியுறவு அமைச்சு மற்றும் ஆஸ்திரேலிய அரசுடன் இணைந்து இந்திய மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங், இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெயசங்கர், சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் டொக்டர் விவியன் பாலகிருஷ்ணன் மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் உள்ளிட்ட இந்து சமுத்திர நாடுகளின் பிரதிநிதிகள் , இந்திய மன்றத்தின் ராம் மாதவ் உள்ளிட்ட பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்து சமுத்திரத்தில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு விரிவான பிராந்திய திட்டமொன்று அவசியம் என்றும், அதனை இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைவர்களால் மட்டுமே செய்ய முடியும் என்றும் சுட்டிக் காட்டினார்.

கடல் மற்றும் விமான போக்குவரத்துச் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்காத வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பிலான ஒழுங்கு விதிகள், காலநிலை நெருக்கடியை கையாள்வது மற்றும் இந்து சமுத்திரத்தின் நிலையான பயன்பாடு தொடர்பான வழிகாட்டல் விதிமுறைகளின் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், வர்த்தகப் போக்குவரத்துகளுக்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சூயஸ் கால்வாய் உள்ளிட்டவை எதிர்காலத்தில் போதுமானதாக இருக்காது. எனவே, பிராந்தியத்தின் விநியோக மையம் என்ற வகையில் இலங்கை தென்னிந்தியாவுடன் வர்த்தகத்தை எளிதாக்குவதற்கான புதிய தரைவழித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோல், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஸ்திரத் தன்மையை பேணுவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதேபோன்றே காலநிலை மாற்றத்துக்கான தீர்வுகளைக் கண்டறிவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்து சமுத்திரத்தின் ஸ்திரத்தன்மைக்காக, 5 வருடங்களுக்குள் சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான பாலஸ்தீன அரசை நிறுவி, இஸ்ரேல் அரசன் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளின் மூலம் காஸா பகுதியில் போர் மோதல்களை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவது அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத் துரைத்தார்.















# மேற்கு ஆஸ்திரேலிய முதலமைச்சருடன் ஜனாதிபதி இருதரப்பு கலந்துரையாடல்



இந்து சமுத்திர மாநாட்டில் பிரதான உரையாற்ற ஆஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் மேற்கு அவுஸ்ரேலியாவின் முதல்வர் ரோஜர் குக்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று பேர்த் நகரில் நடைபெற்றது.



இலங்கைக்கும் மேற்கு ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும், இலங்கைக்கும் பேர்த் நகருக்கும் இடையிலான நேரடி விமான சேவைகளை மேம்படுத்துவதற்கும் முதல்வர் ரோஜர் குக் இணக்கம் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் காணப்படும் சாத்தியக்கூறுகளை விவரித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தத் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்குமாறும், இலங்கைக்கு விஜயம் செய்து, இலங்கையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராயுமாறும் மேற்கு ஆஸ்திரேலியாவின் முதல்வர் ரோஜர் குக்கிற்கு அழைப்பு விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஆஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஷ்வர, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிந்தக மாயதுன்ன, இஷாக் ரஹ்மான், ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே மற்றும் ரிஷான் டி சில்வா ஆகியோரும் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டனர்.





# ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனீ வோங்கிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்து சமுத்திர வலய நாடுகள் சங கத்தின் செயற்பாடுகளையும் அதன் முக்கியத்துவத்தையும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனீ வோங்கி டம் ஜனாதிபதி இதன்போது விளக்கியுள்ளார்

பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல புதிய துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.02.2024




இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் பணியின் தரத்தில் உங்கள் திறமை பிரதிபலிக்கும். நீங்கள் பணியை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வீர்கள். அவரும் பதிலுக்கு உங்களுடன் அன்பாய் நடந்து கொள்வார்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். சேமிப்பதற்கும் சாதகமான வாய்ப்புகள் காணப்படும்.

இன்று உங்களிடம் மன உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பரபரப்பான நாளாக இருக்கும். உங்கள் வளர்ச்சி குறித்த மகிழ்ச்சி காணப்படும். முக்கிய முடிவுகள் உங்கள் ஆர்வத்தை மேம்படுத்தும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் மேம்படுவதற்கான வழியைக் காண்பீர்கள். உங்கள் துணையுடனான அன்புப் பிணைப்பு வலுப்பெறும் வகையில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியான இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை திருப்தி அளிக்கும். நீண்ட கால நிலுவை தொகைகள் உங்கள் கைக்கு வந்து சேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். தேக ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று பொறுமையாக இருக்க வேண்டும். அனைத்து விஷயங்களிலும் சகஜமாக இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆறுதல் பெற முடியும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகளைக் குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உங்கள துணையுடனான உறவின் மகிழ்ச்சி பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். கூடுதல் பொறுப்பு காரணமாக வங்கியிருப்பை சிறப்பாக பராமரிக்க இயலாது.

கணுக்கால்களில் வலி காணப்படலாம்.தகுந்த மருத்துவ சிகிச்சை மூலம் குணம் பெறலாம்




ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதற்கு உகந்த சூழ்நிலை காணப்படும். அதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள். உங்களுக்கு சாதகமாக நிகழ்வுகள் அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக பணியில் தவறு செய்வீர்கள். உங்கள் மேலதிகாரிங்களின் நன்மதிப்பை பெற நீங்கள் கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள துணையிடம் சகஜமாகப் பேசுவீர்கள். இதனால் உங்கள் கருத்துக்களை வெளிபடையாக கூற இயலும். இதனால் நல்லுறவு உருவாகும். பொருளாதார பாதுகாப்புக்காக நீங்கள் போதிய அளவு பணம் சேமிக்க வேண்டும். பண வரவு குறிப்பிடும் வகையில் காணப்படாது.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் சுமூகமாகச் செயல்பட வேண்டும். வாழ்க்கையின் சரியான மற்றும் தவறான விஷயங்களை பிரித்தறிய வேண்டும்.

உங்களின் கடின உழைப்பிற்கு உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். இதனால் உங்களிடம் போதிய பணம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறக் கடினமாக உழைப்பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

இன்று பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியம்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.




இன்று குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனால் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள். பக்திப் பாடல்கள் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சந்திப்பீர்கள். பணியில் உயர்வு காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் அம்சத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள். அஜீரணக் கோளாறு மற்றும் கால் வலி காணப்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சரிவிகித உணவை உட்கொள்ள வேண்டும்.




இன்று வெற்றி பெறுவதற்கு தைரியமும் உறுதியும் தேவை. உங்கள் இலக்குகளை அடைய இவற்றை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியில் நற்பலன் காண கவனமாக பணியாற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறு செய்ய நேரலாம். உங்கள் பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இன்று கூடுதல் செலவு காணப்படும். இது தேவையற்ற செலவாக இருக்கும்.

போதிய தூக்கமின்மை காரணமாக கால் வலியால் இன்று நீங்கள் பாதிக்கபடலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.02.2024




இன்று உங்கள் முயற்சி மூலம் நன்மையான விஷயங்களைப் பெறுவீர்கள். சிறந்த அதிர்ஷ்டத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நல்ல பெயரெடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் இனிமையாக ஆக்கலாம். இந்த மகிழ்ச்சியின் காரணமாக உங்கள் இருவரிடையே நெருங்கிய பிணைப்பு ஏற்படும்.

இன்று கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு நிலை உயரும் வாய்ப்பு உள்ளது.




இன்று எழும் வேறுபாட்டை தீர்க்க பக்குவமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். மாறுபடும் சூழ்நிலைகேற்ப இன்று நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் நீங்கள் சிறிது போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும். பணிகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும். பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை விழிப்புடன் கையாள வேண்டும்.கண் எரிச்சல் காணப்படும். இது உங்களுக்குக் கவலை அளிக்கும்.




இன்று சில விஷயங்களை நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் மனக்குழப்பம் ஏற்படும்.

அதிக வேலைகள் உங்களுக்கு கவலையை உண்டாக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.உங்கள் துணையுடன் நட்பாக நடந்துகொள்ள வேண்டும். நல்ல புரிந்துணர்வுக்கு இது மிகவும் அவசியம்.

பண வரவு குறைந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நேர்மறையான எண்ணங்கள் காரணமாக உங்கள் மன ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முக்கிய நிகழ்வுகளை தவிர்க்க வேண்டும். இன்று உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்க்க வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை நேரத்தோடு முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் துணையுடன் சிறிது வன்மையாக உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.அதிக பொறுப்புகள் காரணமாக குடும்பத்திற்கு செலவு செய்ய வேண்டியிருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES
40 Years Housing Experience

S.Thamilan
Group Chairman

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
JAFFNA OFFICE

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

# தி.மு.க. கூட்டணியுடன் ம.நீ.ம. இணையும் சாத்தியம்





எதிர்வரும் மக்களவைத் தேர்தலை, வலுவான கூட்டணியுடன் எதிர்கொள்ள வேண்டும் எனக் கருதி தி.மு.க. காய்களை நகர்த்தி வருகிறது.

அதனால், கூட்டணிக் கட்சிகளை இறுதி செய்வதிலும், அவர்களுக்குத் தொகுதிகளைப் பங்கீடு செய்து தருவதிலும் தி.மு.க. தீவிர முனைப்புடன் செயலாற்றத் தொடங்கியுள்ளது. தி.மு.கவுடன் தற்போது வரை காங்கிரஸ், வி.சி.க, இந்திய கொம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், ம.தி.மு.க, இந்திய முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, கொங்கு தேசிய மக்கள் கட்சிகளின் கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், மக்கள் நீதி மய்யமும் இணையுமா என்னும் கேள்வி எழுந்தது.

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி, மக்களவைத் தேர்தலுக்கான ஆலோசனைக் கூட்டத்தை மக்கள் நீதி மய்யம் நடத்தியது. அதில், 'எங்கள் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் கட்சிகளுடன் கூட்டணி வைப்போம்' என முடிவெடுக்கப்பட்டது.

ஆனால், தொடக்கம் முதலே தி.மு.க. கூட்டணியில்தான் மக்கள் நீதி மய்யம் இணையும் என சொல்லப்பட்டு வந்தது. அந்த வகையில், தென் சென்னை, கோவை ஆகிய இரு இடங்களை ஒதுக்கச் சொல்லி, தி.மு.கவுடன் மக்கள் நீதி மய்யம் கேட்டு வந்தது. ஆனால், தி.மு.க. ஒரு தொகுதியை மட்டுமே ஒதுக்க முடிவெடுத்திருப்பதாகத் தகவல்கள் கசிந்தன.

கேட்கும் தொகுதி கிடைக்கவில்லை என்றால், தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவை மட்டும் கொடுத்துவிட்டு, மாநிலங்களவையில் ஓர் உறுப்பினர் பதவியைப் பெற்றுக்கொள்ள கமல் திட்டமிட்டிருக்கிறார் என தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தற்போது, தி.மு.க. கைகாட்டும் ஓர் இடத்தில் களமிறங்க மக்கள் நீதி மய்யம் முடிவெடுத்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்கள் நீதி மய்யத்துக்கு ஒரு தொகுதி தான் என்றால், தென் சென்னை தொகுதி தான் வேண்டும் என கேட்கப்பட்டது. ஆனால், கோவையில் கமலை களமிறக்கவே தி.மு.க. திட்டமிட்டுள்ளது. கோவையில் அ.தி.மு.க. பலத்துடன் இருக்கிறது. பா.ஜ.கவின் கையும் அங்கு ஓங்கித்தான் உள்ளது. கடந்த சட்டமன்றத் தேர்தலில், கோவை தொற்குத் தொகுதியில் கமல் களமிறங்கினார். அவரை எதிர்த்து களமாடிய பா.ஜ.க. வேட்பாளர் வானதி சீனிவாசனை விட 1,728 வாக்குகள் மட்டுமே குறைவாகப் பெற்று தோற்றார்.

இதனால், கோவையில் போட்டியிட கமல் சரியானவர் என தி.மு.க. தலைமை நினைக்கிறது. இதனால், கோவையை கமலுக்கு கொடுக்க தி.மு.க. திட்டமிட்டுள்ளது.

## அரசியல் என்பது பொழுதுபோக்கு இடம் கிடையாது: நடிகர் விஷால்



"அரசியல் என்பது பொதுப்பணி. அது ஒரு சமூக சேவை. சினிமா உள்ளிட்ட மற்ற துறைகளைப் போன்ற ஒரு துறை கிடையாது. அரசியல் என்பது பொழுதுபோக்கும் இல்லை. பொழுது போக்குவதற்காக சும்மா வந்துபோகும் இடமும் கிடையாது."

– இவ்வாறு நடிகர் விஷால் கூறியுள்ளார்.

சென்னையில் நடிகர் விஷால் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் தெரிவிக்கையில்,

"அரசியல் என்பது பொதுப்பணி. அது ஒரு சமூக சேவை. சினிமா உள்ளிட்ட மற்ற துறைகளைப் போன்ற ஒரு துறை கிடையாது. அரசியல் என்பது பொழுதுபோக்கும் இல்லை. பொழுது போக்குவதற்காக சும்மா வந்துபோகும் இடமும் கிடையாது. மக்களுக்கு யார் நன்மை செய்தாலும் அவர்கள் அனைவருமே அரசியல்வாதிகள்தான்.

2026 இல் தேர்தல் வருகிறது. இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. நான் அரசியலுக்கு வரமாட்டேன், நான் வரப் போகிறேன் என்று கூறிவிட்டு வராமல் இருப்பது, அப்படி எல்லாம் எதுவும் இல்லை. அந்தந்த நேரத்தில், காலக்கட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்படுமோ, அது எடுக்கப்படும்.

காரணம், நான் நடிகர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆவேன் என்று எனக்கே தெரியாது. ஒரு நடிகனாக நான் 2004 இல் இருந்து செயல்பட்டு வந்தேன். எனக்கு நடிகர் சங்க அட்டை வழங்கிய ராதாரவியை எதிர்த்து நிற்பேன் என்று கனவில்கூட நான் நினைத்துப் பார்க்கவில்லை. அதேபோல், தயாரிப்பாளர் சங்கத்தில் நான் நிற்பேன் என்றும் எதிர்பார்க்கவில்லை. அது போலத்தான், எல்லாமே அந்தந்த காலக் கட்டத்தில் எடுக்கக்கூடிய முடிவுதான்.

எனவே, அந்த நேரத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டால், சரியான பதில் வரும். இது ஏதோ, மழுப்பலாக பேசுவது இல்லை. நான் அந்த நேரத்தில் வருவேன், வரமாட்டேன் என்று கூறுவது போன்றது கிடையாது.

முன்பெல்லாம், ஒரு திரையரங்கில் ஒரு சினிமா அல்லது இரண்டு சினிமா தான் ஓடும். இன்று மல்டிபிளக்ஸ் வந்ததால் 6 முதல் 7 படங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இது ஒரு வளர்ச்சி. அதேபோலத்தான் 2026 தேர்தலில், மக்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய பிரதிநிதிகள் நிறைய பேர் இருப்பார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து."

– என்றார்.

## விண்வெளியில் இந்தியாவின் ஆய்வு மையம்!



விண்வெளியில், ஆய்வு நிலையமொன்றை அமைக்கும் முயற்சியில் இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ முழுமூச்சாக இறங்கியுள்ளது.

மேலும், இவ்வாறு அமைக்கப்படவுள்ள ஆய்வு மையமானது எதிர்வரும் 2035 ஆம் ஆண்டுக்குள் செயற்பாட்டுக்குள் வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் ஏற்கனவே அமெரிக்கா, ரஷ்யா, கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையமொன்றை உருவாகியுள்ளன.

அத்துடன், சீனாவும்தனியாக ஒரு விண்வெளி நிலையத்தை அமைத்துள்ள நிலையில் தற்போது இந்தியாவும் இந்த பட்டியலில் மூன்றாவதாக இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பாகிஸ்தான் தேர்தல் முடிவுகளில் இம்ரான்கான் கட்சி முன்னிலை

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் இம்ரான் கானின் பி.டி.ஐ. கட்சி அதிக இடங்களில் முன்னிலை வகிக்கின்றது என அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இரட்டை குண்டுவெடிப்பு பதற்றத்தின் மத்தியில் பாகிஸ்தானில் நேற்று முன்தினம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. காலை 8 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணி வரை நடைபெற்றது.

பாகிஸ்தானில் மொத்தம் 336 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் 60 இடங்கள் பெண்களுக்காகவும், 10 இடங்கள் சிறுபான்மை மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டு உள்ளன.

மீதம் உள்ள 266 தொகுதிகளுக்கும் நேரடியாக மக்கள் மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றதோடு பஞ்சாப், சிந்து, கைபர் பக்துங்க்வா, பலுசிஸ்தான் ஆகிய மாகாணங்களுக்கும் நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது.

இதற்காக நாடு முழுவதும் 90 ஆயிரத்து 582 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. மேலும் பதற்றமான சூழ்நிலைகாரணமாக தேர்தல் பாதுகாப்பு பணியில் சுமார் 65 ஆயிரம் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர்.

தேர்தல் முடிந்ததும் வாக்கு எண்ணும் பணி ஆரம்பமாகியது. தேர்தலை பொறுத்தவரை முன்னாள் பிரதமர்கானான இம்ரான்கானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி, நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் ஆகிய கட்சிகளிடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், இம்ரான் கானின் பி.டி.ஐ. கட்சியினர் அதிக இடங்களில் முன்னிலை வகிப்பதாக அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர். மேலும், பல இடங்களில் தேர்தல் முடிவுகளை வெளியிடாமல் நிறுத்தி வைத்து இருப்பதாகவும் பி.டி.ஐ. கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றி ஆட்சியமைத்த முன்னாள் பிரதமர் இம்ரான்கான், ஊழல் மற்றும் இரகசியக் காப்புறுதி மீறல் வழக்குகளில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மேலும், இம்ரான்கானின் பி.டி.ஐ. கட்சிக்கு துடுப்பாட்ட மட்டை சின்னம் வழங்க தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளதால் இம்ரான் கான் கட்சியினர் சுயேட்சையாக போட்டியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆத்திரத்தை தூண்டினால் அழித்துவிடுவோம்: தென் கொரியாவுக்கு கிம் ஜாங் உன் மிரட்டல்

ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டால் தென் கொரியாவை வட கொரியா அழித்து நிர்மூலமாக்கிவிடும் என்று கிம் ஜாங் உன் மிரட்டல் விடுத்துள்ளார்.

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், அணு ஆயுத நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருவதோடு, ஆயுத பலத்தை அதிகரித்து உலகநாடுகளை அச்சுறுத்தி வருகிறார்.

அதற்கு பதில் நடவடிக்கையாக அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்த இராணுவ பயிற்சிகளை தீவிரப்படுத்துவதால் கடந்த சில மாதங்களாகவே கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவி வருகின்றது.

அதேவேளை, தென் கொரியாவுடனான அனைத்து பொருளாதார ஒத்துழைப்பையும் முறித்துக்கொள்வதாக வட கொரியா அறிவித்துள்ளது.



மேலும், சமீபத்தில் இராணுவ வீரர்களிடையே கிம் ஜாங் உன் பேசும்போது, போருக்கு தயார் நிலையில் இருக்கும்படி தெரிவித்துள்ளதால் போர் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சென்று பணிகளை பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, தென் கொரியாவுடன் தூதரக உறவை தொடரவோ பேச்சுவார்த்தை நடத்தவோ விருப்பம் இல்லை. தொடர்ந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டால் தென் கொரியாவை வட கொரியா அழித்து நிர்மூலமாக்கிவிடும்.

தென் கொரியாவுடனான உறவுகளைத் துண்டிப்பது தொடர்பான சமீபத்திய நகர்வுகள், இராணுவம் தனது அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்த அனுமதிப்பதாகவும், எப்போது தூண்டப்பட்டாலும் தென் கொரியாவை தாக்கி அழிக்க சட்டப்பூர்வ அனுமதியை பெறுவதாகவும் வட கொரிய அதிபர் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.